இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 213 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மாசி 30 – வெள்ளிக்கிழமை 14 மார்ச் 2025 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 213 : Thiruvalluvar Year - 2056 - Maasi 30 - Friday 14 March 2025 - Dak 12 Pages ₹ 5.00



தமிழ்நாடு முதலமைச்சரும், மாநில திட்டக்குழு தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (13.3.2025) தலைமைச் செயலகத்தில், மாநில திட்டக் குழுவின் ஆறாவது கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை முதலமைச்சரும், மாநில திட்டக் குழுவின் அலுவல் சார் துணைத் தலைவருமான உதயநிதி ஸ்டாலின், செயல் துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ரமேஷ் சந்த் மீனா, துணை முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், திட்டக்குழு உறுப்பினர்கள் பேராசிரியர் இராம. சீனுவாசன், பேராசிரியர் சுல்தான் அகமது இஸ்மாயில், கே. தீனபந்து, (ஓய்வு), மருத்துவர் நா. எழிலன் எம்.எல்.ஏ., திருமதி மல்லிகா சீனிவாசன், மருத்துவர் ஜெ. அமலோற்பவநாதன், சித்த மருத்துவர் ஜி. சிவராமன், முனைவர் நர்த்தகி நடராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.3.2025) தலைமைச் செயலகத்தில், மாநில திட்டக் குழுவின் சார்பில் தயாரிக்கப்பட்ட "தமிழ்நாடு பொருளாதார ஆய்வறிக்கை 2024–25யை (Economic Survey of Tamil Nadu 2024–25) வெளியிட்டார். உடன் துணை முதலமைச்சரும், மாநில திட்டக் குழு துணைத் தலைவருமான உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் தங்கம் தென்னரசு, செயல் துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ. ஜெயரஞ்சன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், நிதித்துறை துணை செயலாளர் செ.ஆ. ரிஷப் ஆகியோர் உள்ளனர்.

## பதவி சுகத்துக்காக ஒன்றிய அரசிடம் பணியும் அடிமைக் கூட்டம் அல்ல நாங்கள்!

# பா.ஜ.க.வின் பாசிச நடவடிக்கைகளுக்கு எதிராக ஒட்டுமொத்த இந்தியாவைத் திரட்டுவோம்!

### திருவள்ளூரில் நடைபெற்ற மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டத்தில்

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சி உரை!

**திருவள்ளூர், மார்ச் 14–**

**"பதவி சுகத்துக்காக ஒன்றிய அரசிடம் பணியும் அடிமைக் கூட்டம் அல்ல நாங்கள்!" என்றும் "பா.ஜ.க.வின் பாசிச நடவடிக்கைகளுக்கு எதிராக ஒட்டுமொத்த இந்தியாவைத் திரட்டுவோம்!" என்றும் குறிப்பிட்டு திருவள்ளூரில் நடைபெற்ற மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டத்தில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் எழுச்சி உரை யாற்றினார்.**

திருவள்ளூரில் நடைபெற்ற ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிரான 'தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!' கண்டனப் பொதுக்கூட்டத்தில் கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு ஆற்றிய உரை வருமாறு :-

'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்' என்று ஒன்றிய ஆட்சியாளர்களை நோக்கிக் கேட்கின்ற வகையில் திரண்டிருக்கும் தமிழினமே... இந்த இனத்திற்காக - இனிமைமிகு நம்முடைய தமிழ் மொழிக்காக - தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக - ஆபத்து வந்தால், 'வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும்' என்று வீர முழக்கமிட்டு, எந்தத் தியாகத்திற்கும் தயாராக இருக்கும் திராவிடப் பட்டாளமே... நம் இனத்தின் – நிலத்தின் – மொழியின் நலத்தைக் கெடுக்கும் எதிரிகள் எவராக இருப்பினும், துணிவுடன் எதிர்கொள்ளும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வீர உடன்பிறப்புகளே... தி.மு.க. மீது நம்பிக்கை வைத்துத் திரண்டிருக்கும் பொதுமக்களே...




கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.3.2025) திருவள்ளூரில் நடைபெற்ற "தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்" ஒன்றிய அரசுக்கு எதிரான கண்டனப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றினார். இக்கூட்டத்தில், திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளர், அமைச்சர் சா.மு.நாசர், திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான திருத்தணி எஸ். சந்திரன், திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி.ராஜேந்திரன், ஏ.கிருஷ்ணசாமி, கோவிந்தராஜன், தலைமைக் கழக நிர்வாகிகள், ஒருங்கிணைந்த திருவள்ளூர் மாவட்டக் கழக நிர்வாகிகள், கழகத்தின் பல்வேறு அணிகளைச் சார்ந்த நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நீங்கள் எண்ணிப் பாருங்கள். மூன்று ஆண்டுகளில் நம்முடைய மாநிலம் எந்த அளவிற்கு முன்னேறியிருக்கிறது. அதற்கு முன்பு எவ்வாறு இருந்தது என்று சற்று சிந்தித்துப் பாருங்கள். முந்தைய ஆட்சியாளர்களால் பத்தாண்டு காலம் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டின் வளர்ச்சி – வளைந்த முதுகுடன் தமிழ்நாட்டின் உரிமைகளை டெல்லியின் காலடியில் அடகு வைத்து ஊர்ந்த அவலம் – இதையெல்லாம் கண்டு பொறுக்காத மானமுள்ள தமிழினம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி அமைந்தால்தான், நாடும் – நாட்டு மக்களும் நிம்மதியாக இருக்க முடியும்... சுயமரியாதை உணர்வுடன் தலைநிமிர்ந்து வாழ முடியும் என்று முடிவு செய்து, 2021–ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், நம்முடைய கூட்டணிக்கு மாபெரும் வெற்றியைத் தந்து, நம்முடைய திராவிட மாடல் ஆட்சியை உருவாக்கினார்கள்!

மக்களாகிய நீங்கள், எங்கள் மேல் வைத்த நம்பிக்கையை நாளும் காப்பாற்றி – இந்தியாவே திரும்பிப் பார்க்கும் திட்டங்களை செயல்படுத்திக் கொண்டு வருகிறோம்! கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் – விடியல் பயணம் திட்டம் – முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் – புதுமைப்பெண் திட்டம் - தமிழ்ப்புதல்வன் திட்டம் - இல்லம் தேடிக் கல்வி - மக்களைத் தேடி மருத்துவம் – நான் முதல்வன் – இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 – இதயம் காப்போம் – பாதம் பாதுகாப்போம் – முதல்வர் மருந்தகம் – தோழி விடுதி –கலைஞர் கனவு இல்லம் – அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் – ஊட்டச்சத்தை உறுதிசெய் திட்டம் என்று, குழந்தைகள், பள்ளி – கல்லூரி மாணவர்கள், இளைஞர்கள், மகளிர், உழவர்கள், பாட்டாளிகள், தொழில் முனைவோர், முதியோர் என்று, அனைத்து தரப்பு மக்களுக்குமான ஆட்சியை நடத்திக் கொண்டு வருகிறோம்.

### மக்களின் நம்பிக்கையை நாளும் காப்பாற்றி வருகிறோம்!

நம்முடைய மாநிலத்தின் வளர்ச்சியை பற்றி உங்கள் முதலமைச்சரான நான் பெருமையாக சொல்வதைவிட, ஒன்றிய அரசே சொல்லியிருக்கிறது. ஒன்றிய அரசு வெளியிடும் அனைத்து ஆய்வறிக்கைகளிலும் – புள்ளிவிவரங்களிலும் தமிழ்நாடுதான் முன்னணி மாநிலமாக இருக்கிறது! அதனால்தான், நம்முடைய திட்டங்களை பிற மாநில அரசுகளும் தங்களின் மாநிலங்களுக்கு எடுத்துக் கொண்டு செல்கிறார்கள்... தமிழ்நாடு வளர்ச்சிப் பாதையில் மீண்டும் நடைபோடுகிறது...

ஒரு மாநில அரசு சிறப்பாக செயல்பட்டு நாட்டுக்கே எடுத்துக்காட்டாக இருக்கிறது என்றால், அந்த மாநிலத்திற்கு துணை நிற்க வேண்டியது, ஒன்றிய அரசின் கடமை! ஆனால், ஒன்றிய பா.ஜ.க. அரசு எப்படிப்பட்ட

தொடர்ச்சி 3–ஆம் பக்கம்

### தமிழ்நாடு சட்டப்பேரவை பட்ஜெட் கூட்டத் தொடர் இன்று தொடங்குகிறது

# அடுத்த நிதியாண்டுக்கான பட்ஜெட் இன்று தாக்கல்!

## வேளாண் துறைக்கான பட்ஜெட் நாளை தாக்கல்!

*சென்னை, மார்ச் 14-*

*தமிழ்நாடு சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத் தொடர் இன்று தொடங்குகிறது. அடுத்த நிதியாண்டுக்கான பட்ஜெட் இன்றும், வேளாண் துறைக்கான பட்ஜெட் நாளையும் தாக்கல் செய்யப்படுகிறது.*

*பட்ஜெட்டை நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்கிறார். வேளாண் பட்ஜெட்டை அமைச்சர் எம்.ஆர்.கே பன்னீர்செல்வம் தாக்கல் செய்கிறார். இவ்வாண்டுக்கான தமிழ்நாடு சட்டப்பேரவையின் முதல் கூட்டத் தொடர் கடந்த ஜனவரி 6 ஆம் தேதி தொடங்கி 11 ஆம் தேதி வரை நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத் தொடர் இன்று காலை 9.30 மணிக்கு தொடங்குகிறது.*

*இக்கூட்டத் தொடரின் முதல் நாள் 2025-26ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்கிறார். பட்ஜெட் தாக்கல் செய்வதற்கு முன்பு, பொருளாதார ஆய்வறிக்கையை தமிழ்நாடு அரசு முதல் முறையாக தாக்கல் செய்ய உள்ளது. பொருளாதார ஆய்வறிக்கையில் அரசின் நிதிநிலை, உள்நாட்டு உற்பத்தி, செயல்படுத்தி வரும் திட்டங்களின் நிலை, வரும் ஆண்டுகளில் மாநில நிதிநிலை எப்படி இருக்கும் என்பன உள்ளிட்ட பல்வேறு தரவுகள் இடம்பெறவுள்ளன.*

*நாளை வேளாண் துறைக்கான நிதிநிலை அறிக்கையை வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் தாக்கல் செய்கிறார். 2025-2026ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் மற்றும் 2024-2025ஆம் ஆண்டின் கூடுதல் செலவுக்கான மானி யக் கோரிக்கைகள் மார்ச் 21ஆம் தேதி தாக்கல் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.*

### தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கை தாக்கல்!

# சென்னையில் 100 இடங்களில் நேரடி ஒளிபரப்பு!

## சென்னை மாநகராட்சி ஏற்பாடு!

*சென்னை, மார்ச் 14-*

*தமிழ்நாடு சட்டப்பேரவையில் இன்று நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்படுகிறது.*

*பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் 100 இடங்களில் நேரடி ஒளிபரப்பு மற்றும் 15ம் தேதி வேளாண் நிதிநிலை அறிக்கையும் நேரடி ஒளி பரப்பு செய்யப்படுகிறது.*

*தமிழ்நாடு அரசின் நிதி நிலை அறிக்கையை, சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் 100 இடங்களில் நேரடி ஒளிபரப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிதி நிலை அறிக்கையை பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில், பெருநகர மாநகராட்சிக்குட்பட்ட சென்ட்ரல் ரயில் நிலையம், முரசொலி மாறன் பூங்கா, அண்ணாநகர் டவர் பூங்கா, கோயம்பேடு பேருந்து நிலையம், மெரினா கடற்கரை, பாண்டிபஜார் சாலை, கத்திப்பாரா பூங்கா, பெசன்ட் நகர் கடற்கரை, திருவான்மியூர் கடற்கரை உள்ளிட்ட 100 இடங்களில் எல்.இ.டி. திரை மூலம் காலை 9.30 மணி முதல் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட உள்ளது. மேலும், நாளை (15ம் தேதி) சனிக்கிழமை காலை 9.30 மணிமுதல் வேளாண் நிதிநிலை அறிக்கையும் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட உள்ளது.*